

# பழமை மாறாது புதுமை பெறும் பண்பாட்டுச் சின்னங்கள்!

## திராவிட மாடல் அரசு

80

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

'**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**' எனும் கணியன் பூங்குன்றனாரின் வரி, கோட்பாட்டு ரீதியாக தமிழர் பண்பாட்டின் உயர்ந்த நிலையை எடுத்துரைக்கிறது. அந்தக் கோட்பாட்டுக்கு, கண்டு தொட்டு, உணர்ந்து பார்க்கக் கூடியவிதத்தில் ஒரு வடிவம் கொடுத்தால், அது தமிழ்நாட்டின் பண்பாட்டுச் சின்னங்களாக வரிசைகட்டி நிற்கும்..!

ஆம்... ஒரு பண்பாட்டின் வரலாற்றை எழுத, மொழி, இலக்கியம், கலை, அகழாய்வுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள் போன்றவை எவ்வாறு உதவுகின்றனவோ, அதுபோல கட்டடக்கலையும் உதவுகிறது. எனினும், கட்டடக்கலைக்கு உள்ள சிறப்பு, அது, தொழில்நுட்பம், அழகு, கற்பனை ஆகிய மூன்றின் கலவை என்பதாகும்.



மனித இனப் பண்பாட்டின் முன்னேற்றத்தைத் தெளிவாக அறிவதற்கு, கட்டடக்கலை உதவுகிறது. முன்னோர் விட்டுச் சென்றுள்ள கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள், கிணறுகள், மண்டபங்கள் போன்றவற்றின் வாயிலாக கட்டடக் கலைகளின் வளர்ச்சியை அறிகிறோம். இத்தகைய கட்டடக்கலை மரபு களை, அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு அவற்றைப் பேணிகாப்பது நமது கடமையாகும்.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் 110 வரலாற்றுச் சின்னங் கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில், 'மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை', 'தஞ்சாவூர் மராட்டா அரண்மனை', 'மனோரா நினைவுச் சின்னம்', 'தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை', 'இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை' போன்றவற்றுக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

### தமிழிக் கல்வெட்டுகள் பாதுகாப்பு!

பண்பாட்டுக் கட்டடங்களை மட்டுமல்லாது, கல்வெட்டுகளையும் தொல்லியல் துறை பாது காக்கிறது. தமிழ் மொழியினை, செம்மொழியாக அறிவிக்கத் துணை நின்ற முக்கியச் சான்றுகளில் முதன்மையானது 'தமிழிக் கல்வெட்டுகள்'. கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டம் நெகனூர்பட்டி மற்றும் தொண்டூர், மதுரை மாவட்டத்திலுள்ள முதலைக்குளம் மற்றும் அரிட்டாப்பட்டியில் உள்ள தமிழிக் கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் பாதுகாப்புச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டன. இந்த அரிய பொக்கிஷத்தினைப் பாதுகாக்க, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.3 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு', மேற்கண்ட இடங் களில் பாதுகாப்பு, மறுசீரமைப்புப் பணிகளை 16.92 கோடி மதிப்பில் மேற்கொண்டு வருகிறது. இதில் என்ன சிறப்பு எனில், இந்தப் பணிகள் குறித்து, தேர்தல் அறிக்கையில் ஒரு வாக்குறுதியாகவே நமது கழகத் தலைவர் அவர்கள் அறிவித்திருந்தார்கள் என்பதுதான்!

### மதுரை:
### திருமலை நாயக்கர் அரண்மனை

இந்தியாவில் உள்ள பழம்பெரும் நகரங் களுள் ஒன்று மதுரை. ஸ்டிரோபா, பிளினி, தாலமி போன்ற வெளிநாட்டுப் பயணிகள் சங்க காலப் பாண்டியர் பற்றியும், மதுரையைப்

**'மரபு நம் உரிமை... மீட்டெடுத்தல் தமிழர் தம் கடமை' என்று செயல்பட்டு வரும் 'திராவிட மாடல்' அரசை எவ்வளவு போற்றினாலும் தகும்..!**

பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். பழம்பெரும் பண்பாட்டு மேன்மையினால் 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' என்று மதுரை போற்றப்படுகிறது. பாண்டியர்களைத் தொடர்ந்து, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு கி. பி 17-ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்கள் ஆட்சி செய்தனர். அவர்களில் திருமலை நாயக்க மன்னர் (கி.பி.1623- 1659), கி.பி.1636-ஆம் ஆண்டில் மதுரையில் அரண்மனை ஒன்றினைக் கட்டினார். அதுவே தற்போது 'திருமலை நாயக்கர் அரண்மனை' என்று அழைக்கப்படுகிறது.

திருமலை நாயக்கர் அரண்மனை 'சொர்க்க விலாசம்', 'ரங்க விலாசம்' என இரண்டு முக்கியப் பகுதிகளைக் கொண்டிருந்தது. திருமலை மன்னனின் பேரன் சொக்கநாத நாயக்க மன்னன் தனது தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார். அப்போது இந்த அரண்மனையின் ஒரு பகுதியை இடித்து, திருச்சியில் புதிய அரண்மனையை உருவாக்கினார். தற்போது மதுரை அரண்மனையின் நான்கில் ஒரு பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது.

திருமலை நாயக்கர் அரண்மனை இந்தோ-சாரசனிக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்டதாகும். இந்துக் கோயில்களின் கட்டடக்கலையும், முகமதியக் கட்டடக்கலையும் இணைந்து கட்டப்பட்டும் கலையை 'இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை' என்றழைப்பர்.

சென்னை மாகாண ஆளுநர் நேப்பியர் 1879-இல் ரூ.5 இலட்சம் மதிப்பில் முதன்முதலாகப் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டார். அதன் பிறகு, 1972-இல், கலைஞர் ஆட்சிக் காலத்தில், இந்த அரண்மனை, தொல்லியல் துறையின் பாதுகாப்புச் சின்னமாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

திருமலை நாயக்கர் அரண்மனை நாடகசாலை, பள்ளியறைப் பகுதிகளில் புனரமைப்பு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூ. 8 கோடி நிதியிலும், அரண்மனையின் தொன்மையைப் பாதுகாக்கும் வண்ணம் அனைத்துத் தளப்பகுதிகளிலும் ஒரே மாதிரியான கற்கள் ரூ.3.73 கோடி மதிப்பில் பதிக்கப்படும் பணியும் நடைபெற்று வருகின்றன. திருமலை நாயக்கர் அரண்மனையில் மேற்குப் புறத்தில் கம்பிவேலியுடன் கூடிய மதிற்சுவர் மற்றும் புல்வெளித்தளம் ரூ.61 இலட்சத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. பகல் நேரம் தவிர்த்து, இரவு நேரங்களில் அரண்மனையின் எழிலைக் காண்பதற்கு உள் மற்றும் வெளிப்பகுதிகளில் ஒளியூட்டி அழகூட்டுவதற்கு மரபு சார் ஒளிவிளக்குகள் பொருத்தும் பணிகள் ரூ. 1.70 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

### தஞ்சாவூர்:
### சர்ஜாமாடி மற்றும் தர்பார் மண்டபம்

தஞ்சாவூர் மராட்டியர் அரண்மனையில் சர்ஜாமாடி என்றழைக்கப்படும் கட்டடம் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்திழுக்கக் கூடியதாகும். இங்கு அமைந்துள்ள 'தர்பார் மண்டபம்' சிறப்பிடம் பெற்றது. இங்கு நாயக்கர் மற்றும் மராட்டியர் கால ஓவியங் கள் வரையப்பட்டுள்ளன.



தஞ்சாவூர் மராட்டா அரண்மனை சர்ஜா மாடியில் ரூ.9.43 கோடியில் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளும், தர்பார் மண்டபத்தினைச் சீரமைக்கும் பணிகள் ரூ 6.95 கோடி மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தரங்கம்பாடி:
### டேனிஷ் கோட்டை, கவர்னர் மாளிகை

தரங்கம்பாடியில் வங்கக் கடலை ஒட்டி யுள்ள டேனிஷ் கோட்டை, டென்மார்க் நாட்டினரால் கட்டப்பட்ட 'தால்' கோட்டை யாகும். இந்தக் கோட்டை தஞ்சை நாயக்க மன்னர் இரகுநாத நாயக்கருடன் டேனிஷ் அதிகாரியான ஓவ் கிட் என்பவரால் கி.பி. 1620-ஆம் ஆண்டு தங்க ஓலை மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு கட்டப்பட்ட கட்டடமாகும். இந்தக் கோட்டையே டேனிஷ்காரர்களின் கோட்டைகளில் இரண்டாவது பெரிய கோட்டையாகும். இது தரங்கம்பாடியோடு சேர்த்து 1845-ஆம் ஆண்டில் பிரிட்டிஷாருக்கு விற்கப்பட்டது. இந்தியா விடுதலைக்குப் பிறகு, இது தமிழ்நாடு அரசால் ஆய்வு மாளிகையாக 1978-ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன் பிறகு, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை ரூ. 3.8 கோடி மதிப்பிலும், கோட்டைக்கு எதிரிலுள்ள கவர்னர் மாளிகை ரூ.4.46 கோடி மதிப்பிலும் பழமை மாறாமல் இருக்க, தகுந்த பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'மரபு நம் உரிமை... மீட்டெடுத்தல் தமிழர் தம் கடமை' என்று செயல்பட்டு வரும் 'திராவிட மாடல்' அரசை எவ்வளவு போற்றினாலும் தகும்..!

**...சாதனை தொடரும்**

### சிந்துவெளியும் சங்க இலக்கியமும்...

திருவள்ளுவர் சிலை இல்லாத கன்னியாகுமரியை எப்படி நினைத்துப் பார்க்கமுடியாதோ, அசோகர் இல்லாத இந்திய வரலாற்றை எப்படி நினைக்கமுடியாதோ, அதேபோல ஜான் மார்ஷல் இல்லாத இந்திய வரலாற்றை, கற்பனைகூட செய்து பார்க்க முடியாது என, சமீபத்தில் புதுக்கோட்டைப் புத்தகத் திருவிழாவில், சிந்துவெளிப் பண்பாட்டு ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் குறிப்பிட்டார். அவரது உரை தொடர்பாக, சுமித்ரா சத்தியமூர்த்தி என்கிற வாசகர், தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

உலகிலேயே பழம்பெரும் நாகரிகமான எகிப்திய நாகரிகத்தில் மன்னருக்கான மிகப்பெரிய சமாதிகள் பிரமிடாக இருக்கையில், அதற்கு இணையான சுமேரிய நாகரிகத்தில் கடவுளுக்கான கோவில்கள் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டிருந்த நிலையில், சற்றேறக்குறைய அவற்றுக்கு இணையான சிந்துவெளி நாகரிகத்தில் எளிய மக்கள் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, ஒரு சமூகம் நிலைத்திருந்தது என்பதற்கான விவரங் களைப் பகிர்ந்தார்.

வழுக்காத டைல்ஸ், வாட்டர் ப்ரூப் டைல்ஸ் பயன்படுத்திய குளியல் அறைகள் உலகிலேயே முதல்முறையாக சிந்துவெளியில்தான் கிடைத்திருக்கின்றன.

ஔவையார்தான் உலகின் முதல் பெண் அரசு தூதர் என்று கூறி, இரண்டு மன்னர்களுக்கு இடையே தூதராக, அவர் அரிய செயல்கள் செய்தார்.

சிந்துவெளி மக்களின் பண்பாடும் கலாச்சாரமும் எங்கு தொடர்கின்றன என்று தேடியபோது, அசலாக அத்தனையும் அப்படியே பின்பற்றிய சமூகம் சங்க இலக்கியத்தில் இருக்கிறது.

சங்க இலக்கியம், எருமையைக் கூட சுமேரியாவிற்கு ஏற்றுமதி செய்த சிந்துவெளியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. இந்தியாவின் வரலாறு என்பது வேதகாலப் பண்பாட்டில் இருந்துதான் தொடங்குகிறது என்பதை, தரவுகள் மூலம் மறுத்து "சிந்துவெளியின் பண்பாடு வேறாக இருந்த பண்பாடு அது இந்தியாவின் வேராக இருந்த பண்பாடு" என பாலகிருஷ்ணன் விளக்கினார் எனக் குறிப்பிட்டுள்ளார். சிந்துவெளி காலமும், சங்க இலக்கிய காலமும் திராவிட நிலத்தின் அடையாளம் என்பதை மக்கள் அறிய தொடங்கி இருக்கின்றனர்.

### :ப்ளாஷ்பேக்



இராம.அன்பரசு

**மகள் திருமணத்துக்குப் பெற்ற வாழ்த்து!**

2015-ஆம் ஆண்டில், எனது மகள் அர்ச்சனா பிரியதர்ஷினியின் திருமண அழைப்பிதழை அளித்து, தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்து பெற விரும்பினேன். தலைவரை, கோபாலபுரம் இல்லத்தில் நானும், எனது மனைவி ராணியும் சந்தித்து அழைப்பிதழை அளித்தோம். தேர்தல் பணியில் பரபரப்பாக இருந்தாலும், அவர் கைப்பட, எனது மகளுக்கு வாழ்த்து மடல் அனுப்பி இருந்தது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. தலைவரை சந்தித்ததும், வாழ்த்து பெற்றதும் எங்களின் வாழ்நாளில் மறக்க முடியாத நினைவுகள்.

**-இராம.அன்பரசு, ஒன்றிய பிரதிநிதி, நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**'ஆட்சியைக் கலைத்தாலும் கவலை இல்லை!'**

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை எதிர்ப்பின் உச்சமாக, டிசம்பர் 25 முதல் 29 வரை தி.மு.க.வின் ஐந்தாவது மாநில மாநாடு கோவையில் நடத்தப்பட்டது. மாநாட்டில் முதல் நாளான டிசம்பர் 25-ஆம் தேதி சுமார் 20 லட்சம் பேர் பங்குகொண்ட ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் மொத்தமாக, ஏழு மைல் அளவுக்கு நீண்டிருந்தது. மாநாட்டில் உரையாற்றிய கலைஞர், "மாநில அமைச்சரவை 28-ஆம் தேதிக்குள் கலைக்கப்படும்" என பத்திரி கையில் எழுதி இருக்கிறார்கள் என்று இங்கு பேசுகிறார்கள். இருபத்தி எட்டாம் தேதி என்ன, இப்பொழுது பேசி முடித்துவிட்டு வெளியே செல்லும்பொழுதுகூட எங்கள் அமைச்சரவையை கலைத்தாகிவிட்டது என்ற செய்தி வந்தாலும், கேட்டுப் பரவசம் அடைகிறவர்கள் எங்களைப் போல வேறு யாரும் இருக்கமாட்டார்கள்" என எழுச்சி உரை நிகழ்த்தினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

560

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங் கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131